மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2023 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 21ஆம் நாள் வெள்ளிக்கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.தீபா உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 395/2018 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | வள்ளியம்மாள் | வயது | .. | 50 |
| க/பெ. | .. | சேட்டு | சாதி | .. | |
| கிராமம் | .. | முருகாபாடி | சமயம் | .. | |
| தாலுக்கா | .. | | தொழில் | .. | |

**வா.சா.1 ( குறுக்கு விசாரணை )**

1. காலம் சென்ற 1ம் பிரதிவாதி என் தாயாா். 2ம் பிரதிவாதி என் உடன் பிறந்த சகோதரி. 3ம் பிரதிவாதி என் சகோதரி உடைய கணவா். தாவா சொத்தானது ஆதியில் என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் பாகத்திற்காக வேண்டி நான் தாக்கல் செய்துள்ளேன்.

2. தாவா சொத்தின் விவரங்கள் சர்வே நம்பர் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்த தருணங்களில் எனக்கும் தங்கம்மாள் அவா்களுக்கும் மணியம்மாள் அவா்களுக்கும் தாவா சொத்து தலா 1/3 பாகம் உள்ளது என்று நான் வழக்கு தாக்கல் செய்து இருந்தேன் என்றால் சரியல்ல, என் அம்மாவிற்கு பாகம் கிடையாது. தாவா சொத்தானது என் தந்தைக்கு பாதியப்பட்டது என்று கூறுகையில் என் தந்தை இறந்த பிறகு என் தாயாருக்கு பாகம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

3. நான் கூறுவது தவறு என்றும் வழக்கு தாக்கல் செய்த தருணத்தில் என் தாயாருக்கும் தாவா சொத்தில் 1/3 பாகம் உள்ளது என்று தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும் தருவாயில் 1ம் பிரதிவாதி இறந்துவிட்டாா் என்றால் சரிதான். 1ம்

பிரதிவாதி இறப்பிற்கு பிறகு 3ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் உள்ள அயிட்டம் 1 ,2 ,5 ,7 சொத்துக்களை அவா்களுக்கு கிரையத்திற்கு கொடுத்து இருக்கிறாா் என்று சொன்னால் என்றால் சரியல்ல, கொடுத்து இருப்பாா்கள் அது செல்லாது.

4. என்னுடைய கல்யாணததிற்கு பிறகு முருகாபாடிக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு 15 ஆண்டுகளுக்கு முன்பு குடியேறி விட்டேன் ஏ்ன்றால் சரிதான். என் தகப்பனாா் இறந்த பிறகு என் தாயாா் குடும்பத்தை நடத்துவதற்காக மேற்கூறிய தாவா சொத்தில் அயிட்டம் 1,2,5,7 ஆகிய சொத்துகளை வைத்து தான் குடும்பம் நடத்தி வந்தாா் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி இறந்த பிறகு தாவா சொத்துகளை 3ம் பிரதிவாதி தான் பராமரித்து வருகிறாா் என்றால் சரியல்ல.

5. நானும் என் சகோதரியான 2ம் பிரதிவாதியும் தான் பராமரித்து வருகிறோம். என் தாயாா் அவருக்கு மனு சொத்தில் சேரவேண்டிய 1/3 பாகம் தான் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தாா் ஆகையால் மேற்கூறிய கிரையம் செல்லும் என்றால் செல்லும். நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் 6ம் பத்தியில் எனக்கு 1/3 பங்கு தான் பாகம் சேரவேண்டும் என்று கூறிவிட்டு அதே பத்தியில் எனக்கு தாவா சொத்தில் 1/2 பங்கிற்கு நான் முன்னுக்கு பின் முரணாக கூறியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

6. நான் 19.06. 2017 ல் வழக்கு சொத்தில் அயிட்டம் **2,3,4,6,7, சொத்துக்களில்** பாதி பங்கை ராமசாமி என்பவருக்கு நான் கிரையம் கொடுத்துவிட்டேன் என்று சொன்னால் சரிதான். 13.11.2015ல் வழக்கு சொத்துக்களில் **1ம் அயிட்டத்தை** மணிவண்ணன் என்வருக்கு கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். நான்மேற்கூறிய கியைபத்திரங்களின் மூலம் வழக்கு சொத்துக்களை கிரையம் கொடுத்து விட்ட பிறகு இந்த பாகப்பிரிவினை வழக்கு நிலைக்கதக்கதல்ல ஏ்ன்று சொன்னால் சரியல்ல.

7. மேலும் வழக்கு சொத்தில் எனக்கு 1/3 பங்கு தான் பாகம் உள்ளது ஆகையால் நான் பிரதிவாதியின் பங்கையும் சேர்த்து கிரையம் செய்ததால் மேற்கூறிய இரண்டு கியைப்பத்திரங்கள் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. நான் எனது பாகத்தை மூன்றாம் நபருக்கு கிரையம் கொடுத்து விட்டதால் நான் மீண்டும் பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்ய முடியாது என்றால் சரிதான்.

**( வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

Taken down by me in open Court read
over to the witness and acknowledged
by him/her to be correct.

Sdl/-B.Salma
District Munsif.
Polur.